**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.140/2020**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : கனிராஜ் | Caste | : |
| Father 's Name | : மாரியப்பன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**26.07.2024**
**முதல் விசாரணை**

நான் விருதுநகரில் குடியிருந்து வருகிறேன். நான் இதயம் ஆயில் நிறுவனத்தில் பணி செய்து வருகிறேன். சுமார் 6 வருடங்களுக்கு முன்பு நானும் திலிப்பன், மரகதவேல், ராஜு ஆகியோர்கள் காரில் மதுரைக்கு சென்றுவிட்டு மீண்டும் விருதுநகர் நோக்கி வந்த போது மாலை 3 மணியளவில் சிவரக்கோட்டைக்கு முன்பு வந்துகொண்டிருந்த போது டமார் என்று சத்தம் கேட்டு பார்த்த போது நாங்கள் சென்ற காரானது சாலையில் உருண்டுவிட்டது. நாங்கள் சென்ற காரை திலிப்பன் என்பவர் ஓட்டினார். நான் மயங்கிவிட்டேன். மாலை 6 மணியளவில் நான் மயக்கம் தெளிந்து பார்த்த போது மதுரை ராஜாஜி மருத்துவமனையில் நான் சிகிச்சையில் இருந்தேன். மேற்படி விபத்தில் எனக்கு வலதுகாலில் காயம் இருந்தது. மரகதவேலுக்கு தலையிலும் முகத்தில் காயமும் இருந்தது. காரை ஓட்டிய திலிப்பனுக்கு தோள்பட்டையிலும் காயம் இருந்தது. ஆஜர் எதிரிதான் திலிப்பன் ஆவார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக கோரப்பட்டு அனுமதி அளித்ததின் பேரில் கு.வி.**

நான் சம்பவ தினத்தில் சம்பவ நேரத்தில் சம்பவயிடத்தில் டிஎன் 67 பிஎல் 5810 என்ற காரை ஆஜர் எதிரி திலிப்பன் தான் கவனக்குறைவாக வாகனத்தை ஓட்டி மரகதவேலின் இறப்பிற்கு காரணமானார் என போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குவி. இல்லை**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.140/2020**

**Prosecution Witnesses : 5**

| | | | |
|---|---|---|---|
| Name | :மூக்கன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused present)
**26.07.2024**
**முதல் விசாரணை**

நான் தற்போது சிவகங்கை மாவட்டம் சிவகங்கை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு 26.02.2019 அன்று பகுதி அலுவலகம் திருமங்கலத்தில் மோ.வா.நிலை 1 ஆக பணியாற்றியபோது திருமங்கலம் தாலுகா ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் பேரில் டிஎன் 67 பிஎப் 5810 என்ற இலகுரக காரைஅன்றைய தினமே அலுவலகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். அந்த ஆய்வின் போது வாகனத்தின் முன்பக்க வலது டயர் , முன்பக்க காற்று தடுப்பு கண்ணாடி, இடது புற முன் மற்றும் பின் கதவுகள், மேற்கூரை பேனட் முன்இடது மற்றும் வலது மக்கார்டு மற்றும் ஸ்டேரிங் ஆகியவைகள் சேதமடைந்து காணப்பட்டது. வாகனம் முற்றிலும் சேதமடைந்த நிலையில் காணப்பட்டதால் வாகனத்தின் கைத்தடை திறன் மற்றும் கால்தடை திறன் கண்டறிய முடியவில்லை. இந்த விபத்து எந்தவித இயந்திர கோளாறினாலும் ஏற்படவில்லை என்றும், நான் சான்றளித்தேன். மோ.வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் கு.வி.**

இலகு ரக வாகனம் அதிகபட்சம் 80 கி.மீ வேகத்தில் இயக்கப்படலாம் என்றால் சரிதான். அது அனுமதிக்கப்பட்ட வேகம் ஆகும். மேற்படி வேகத்தில் பிரேக் அடித்தால் வாகனம் கவிழ்ப்பதற்கு வாய்புள்ளது என்றால் சரிதான். அப்போது மேற்படி சேதாரம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.